## குடியரசு தின விழா அணிவகுப்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஊர்திக்கு முதல் பரிசு!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு கேடயம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்!

**சென்னை, ஜன. 29 -**

**குடியரசு நாள் விழாவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர்களுக்கும், அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணி வகுப்பு நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற துறைகளுக்கும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கேடயங்களை வழங்கி வாழ்த்தினார்.**

சென்னை, காமராசர் சாலையில் 26.01.2025 அன்று நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள், தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர், வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம், காந்தியடிகள் காவலர் பதக்கங்கள், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், டாக்டர் நாராயணசாமி நாயுடு வேளாண்மை விருது, சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சரின் கோப்பைகள் ஆகிய பதக்கங்களையும், கோப்பைகளையும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.1.2025) தலைமைச் செயலகத்தில், குடியரசு நாள் விழாவில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நிகழ்ச்சியில், முதல் பரிசு பெற்ற இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் கேடயத்தை வழங்கி வாழ்த்தினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களின் ஆடல் பாடல் கலை நிகழ்ச்சிகளையும், தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையம் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கிராமிய கலை நிகழ்ச்சி களையும், பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினையும் பார்வையிட்டார்கள்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.1.2025) தலைமைச் செயலகத்தில், குடியரசு நாள் விழாவில் நடைபெற்ற பள்ளி மாணவியர்களின் கலை நிகழ்ச்சியில் முதல் பரிசு பெற்ற கொளத்தூர், எவர்வின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவியர்களுக்கும், இரண்டாம் பரிசு பெற்ற மயிலாப்பூர், சிறுவர் தோட்டம் மேல்நிலைப் பள்ளி மாணவியர்களுக்கும், மூன்றாம் பரிசு பெற்ற அசோக் நகர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவியர்களுக்கும் கேடயங்களையும்;

கல்லூரி மாணவியர்களின் கலை நிகழ்ச்சியில் முதல் பரிசு பெற்ற இராணி மேரி கல்லூரி மாணவியர்களுக்கும், இரண்டாம் பரிசு பெற்ற கொளத்தூர், சோகா இகேதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி மாணவியர்களுக்கும், மூன்றாம் பரிசு பெற்ற குரோம்பேட்டை ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் கல்லூரி மாணவியர்களுக்கும் கேடயங்களை வழங்கி வாழ்த்தினார்.

குடியரசு நாள் விழாவில், அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நிகழ்ச்சியில், முதல் பரிசு பெற்ற இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோருக்கும்,

இரண்டாம் பரிசு பெற்ற காவல் துறையின் சார்பில் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை கூடுதல் ஆணையர் என். கண்ணன் ஆகியோருக்கும்,

மூன்றாம் பரிசு பெற்ற இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், இணை ஆணையர் ச. இலட்சுமணன் ஆகியோருக்கும் முதலமைச்சர் அவர்கள் கேடயங்களை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், பொதுத் துறை துணைச் செயலாளர் (மரபு) திருமதி ஜெ.இ. பத்மஜா, பள்ளிக்கல்வி இயக்குநர் கண்ணப்பன், அரசு உயர் அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

---

### துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தலைமையில்

## தஞ்சையில் - வாக்குச் சாவடி முகவர்கள் - கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் கோவி.செழியன் – ஏ.கே.எஸ்.விஜயன் – எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் – ச.முரசொலி பங்கேற்பு!

*தஞ்சாவூர் , ஜன. 29 -*

தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. வாக்குச் சாவடி நிலைய முகவர் (பி.எல்.ஏ2), பி.எல்.சி மற்றும் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தஞ்சை காவேரி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாநகர செயலாளரும், தஞ்சை மேயருமான சண்.இராமநாதன் வரவேற்புரையாற்றினார்.

டெல்லி சிறப்பு பிரதிநிதியும், தஞ்சை தொகுதி மேற்பார்வையாளருமான ஏ.கே.எஸ். விஜயன், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.. பழநிமாணிக்கம், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் டி.கே. ஜி.நீலமேகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் உயர் கல்வி துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சிறப்புரையாற்றி பேசும்போது... தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதி நட்சத்திர தொகுதி ஆகும். தமிழகமே உற்று நோக்கக் கூடிய தொகுதி. சட்டமன்ற கூட்ட தொடரில் அனைத்து எம்.எல்.ஏ.க்களும் அவரவர் தொகுதி பிரச்சினைகளை கூறும் போது உன்னிப்பாக கவனித்து அனைத்தையும் உடனுக்குடன் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்.

விடுபட்ட அனைத்து மகளிர்களுக்கும் உரிமை தொகை விரைவில் வழங்கப்படும் என துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார். இப்படி அனைத்து மக்களும் பல்வேறு நல்ல திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வரும் ஆட்சி நமது முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சிதான்.

வரும் 2026 சட்டமன்ற தொகுதியில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் கண்டிப்பாக தி.மு.க மற்றும் கூட்டணி கட்சிகள் வெல்லும் என்றார்...

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், எம். இராமசந்திரன், மாநில நிர்வாகிகள் சி.இறைவன், எஸ்.ஜித்து, மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, எஸ்.என்.மணிமாறன், அ.புண்ணியமூர்த்தி, கனகவள்ளி பாலாஜி, ஒன்றியச் செயலாளர்கள் தோ.அருளானந்த சாமி, பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.சந்திரசேகர மேத்தா, எஸ். சதாசிவம், டி.எஸ்.கார்த்திக்கேயன், ஆ.கே.நீலகண்டன், வல்லம் பேரூர் செயலாளர் டி.கே.எஸ்.ஜி. கல்யாணசுந்தரம் உள்ளிட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

கூட்ட முடிவில் தஞ்சை கிழக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.செல்வகுமார் நன்றியுரையாற்றினார்.

---

### மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில்

## திருவாரூர் மாவட்ட பொறியாளர் அணி ஒன்றிய - நகர - பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

### எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

திருவாரூர் மாவட்ட பொறியாளர் அணி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் , மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.


இந்த நேர்காணலில் திருவாரூர் மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் பொறியாளர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கு QR CODE மூலம் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாமல் கலந்துகொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : 01.02.2025 (சனிக்கிழமை),

நேரம் : மாலை 4.00 மணி,

இடம் : திருவாரூர் ரோட்டரி சங்க கட்டிடம் (ஹோட்டல் காசீஸ் இன் எதிரில்) திருவாரூர்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி



திருப்பூர் வடக்கு மாவட்ட மாணவர் அணி, திருப்பூர் வடக்கு, தெற்கு மாநகர மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் வடக்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ் தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத், 22 வது வார்டு மாமன்ற உறுப்பினர், முதல் மண்டல முன்னாள் தலைவர் வெ.ராதாகிருஷ்ணன், தெற்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் விஜயசிம்ம ராஜா வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி., திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், திருப்பூர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் க.செல்வராஜ், தலைமைக் கழகப் பேச்சாளர் அன்னவயல் கணேசன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இதில் திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர், தொ.மு.ச பேரவை மாநில துணைச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், பகுதி செயலாளர் முன்னாள் அ.நாகராஜன் உள்பட ஒன்றிய, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

### சேலம் மாவட்டம்

## ஆத்தூர் மூத்த பத்திரிகையாளர் தினகரன் சேகர் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

*சேலம், ஜன. 29 -*

சேலம் மாவட்டம் ஆத்தூரின் மூத்த பத்திரிக்கையாளர். தினகரன் சேகர் அவர்கள் 28. 01.2025 அன்று உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



அவரது உடலுக்கு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், சமூக ஆர்வலர்கள், மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

---



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன் வரவேற்புரையிலும், ஒன்றியச் செயலாளர்கள் ஆறு.சிதம்பரம், இரா.கணேசன் ஆகியோர் தலைமையிலும் திருமயம் அண்ணா சீரணி கலையரங்கில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் ஆடுதுறை உத்திராபதி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் தலைமைக் கழகப் பேச்சாளர் ஈகை தனசேகர், தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன், முன்னாள் ஒன்றியச் செயலாளர் எம்.பி.சரவணன், அணி அமைப்பாளர்கள் கே.ஆர்.ராமசாமி, பாத்திமா பீவி, தேவி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் கார்த்திகுமார், ஆர்.எஸ்.ராஜபெரியண்ணன், பி.எல்.ராஜமாணிக்கம், ஜெய கிருஷ்ணராஜ், மாவட்ட பிரதிநிதிகள் சுப.துரைராஜா, கணேசன், செம்பையா, ஜான் பீட்டர், ராஜமாணிக்கம், முருகேசன், மணிகண்டன், பிரவீன்குமார், சுகன்யா உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. வெற்றிகொண்டான்

**சனவரி 29 (2011)**



பேரறிஞர் அண்ணாவின் தென்றல் நடை மேடைப் பேச்சாலும் – தலைவர் கலைஞர் அவர்களின் கனித்தமிழ்ப் பேச்சாலும் ஈர்க்கப்பட்டு, தனது இளம் வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர்.

தலைவர் உடன்பிறப்புகளுக்கு எழுதிவரும் கடிதங்களால் உந்தப்பட்டு எழுதும் ஆற்றல்பெற்று கட்டுரையாளராகவும் – "பொழுது விடியும்" எனும் நாடகத்தை எழுதி, இவரே நடித்தும் – 'கண்ணியம்'எனும் ஏட்டின் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தும் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர்.

கழகம், மக்களுக்காக நடத்திய அறப்போராட்டங்கள் பலவற்றில் பங்கு கொண்டு பலமுறை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். குறிப்பாக நெருக்கடிகால 'மிசா' சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

கழக தீர்மானக்குழுவின் செயலாளராகவும் – தலைசிறந்த முன்னோடிப் பேச்சாளராகவும், தமிழகத்தின் பட்டிதொட்டியெல்லாம் கழகக் கருத்துக்களையும், தலைவரின் எண்ணங்களையும் பாமர மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் பரப்பி வந்தவரும் – தலைவர் கலைஞரின் இதயத்தில் நீக்கமற நிறைந்திருந்தவரும் – கழகத் தொண்டர்களின் மனத்திரையில் மறக்க முடியாதவருமான இவரது மறைவு குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் துயரத்தால் கண்களைக் கண்ணீர்க் குளமாக்கிக் கொண்டு எழுதிய வைர வரிகள்; "இருக்கின்றாய் நீ என்றைக்கும் கழகத்தோடு – அண்ணாவோடு – அவர்தம் தம்பியராம் எங்களோடு!".

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**